[28th January 1972

1970-71-ல் மாண்புமிகு அமைச்சர்களின் இருப்பிடங்களுக்கு, மேசை, நாற்காலிகள், அறை அலங்காரப் பொருள்கள், புதுப்பித்தல், பழுது பார்த்தல், பேணுதல் முதலியவை குறித்து அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1970-71-ஆம் ஆண்டில் தமிழக அமைச்சர்கள் குடியிருக்கும் வீடுகளைப் பாராமரிப்பதற்காகவும், மரச்சாமான்கள், பொருட்கள், திரைச்சீலைகள், வீடுகளைப் புதுப்பித்து பழுது பார்ப்பதற்கும் மொத்தம் ரூபாய் 1,70,874 செலவாகியுள்ளது.

New road along the sea coast

* 46 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any new road has been laid along the sea coast in Santhome area in Mylapore, Madras; and

(*b*) if so, the details thereof ?

கடற்கரையை ஒட்டிய புதிய சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மைலாப்பூர் சாந்தோம் பகுதியின் கடற்கரை நெடுக புதிய சாலை ஏதேனும் போடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள மெரினா கடற்கரை-முதல், ஓசியானிக் ஓட்டலின் எதிரில் தெற்கு கடற்கரையும் சேரும் இடம் வரையிலும், கடற்கரையை ஒட்டி ரூபாய் 20.85 இலட்சம் செலவில் ஒரு விஸ்தரிப்புச் சாலை போடும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

Celluar concrete plant Ennore

* 47 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the cellular concrete plant of the State Housing Board is to be set up at Ennore; and

(*b*) if so, the details thereof ?

எண்ணூர் புழை கற்கலவை தொழிற்சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) எண்ணூரில், மாநில வீட்டு வசதி வாரியத்தின் புழை கற்கலவை தொழிற்சாலை (Cellular Concrete Plant) அமைக்கப்படவிருக்கிறதா ?

28th January 1972]

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: (அ) ஆம்.

(இ) இப்புழைக் கற்கலவைத் தொழிற்சாலை முன்னரே வார்க்கப்பட்ட செங்கற்களையும் மணலையும் மூலப்பொருளாகப் பயன்படுத்தி மணல் தளக் கற்களையும் உற்பத்தி செய்ய அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி உதவி முழுவதையும் இந்திய அரசு கட்டுகை மாநிலத் திட்ட வரம்பிற்கு புறம்பாக அளித்துள்ளது. இத்தொழிற்சாலைக்கான (திருத்த) மதிப்பீடு ரூ. 365 லட்சமென்று மதிப்பிடப்படுகிறது. மணலைப் பயன்படுத்தி மாதிரி உற்பத்தி 1972 சனவரி இரண்டாவது வாரத்தில் மேற்கொள்ளப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னர் 6 வாரத்திற்குள் முறையான உற்பத்தி ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU V. ISVARMURTI: Sir, has this industry anything to do with the constructon of pre-fabricated house?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: தலைவர் அவர்களே, ப்ரி-ஃபேப்பிரிகேட்டட் ஹவுஸுக்கும் (Prefabricated house) இதற்கும் சம்பந்த மில்லை. தொகைக் கற்கள் என்ற பெயரில் புது மாதிரியான செங்கற்கள் போலந்து நாட்டு உதவியோடு தயாரிக்கப்படுவதாகும்.

THIRU A. R. DAMODARAN: Sir, is it accepted that cellular concrete, which is being produced here, is likely to bring down the cost of house construction?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: இந்தத் தொழிற்சாலையைக் கொண்டுவந்த தற்கே காரணம் 5 சதவிகிதம் கட்டிடச் செலவில் மிச்சமாகும் என்பதுதான்.

Tamil Nadu Tourism Development Corporation

* 48 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Tourism Development Corporation has invited suggestions from the public for a Motif and Slogan about 1971; and

(*b*) if so, the details thereof?

தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் 1971-ம் ஆண்டைக் குறித்து பொதுமக்களிடமிருந்து சுற்றுலா நோக்கம், முழக்கம் குறித்து பொது மக்கள் தங்கள் கருத்துரைகளை அனுப்பும்படி கேட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

THE HON. THIRU K. RAJARAM: (*a*) Yes, The Tamil Nadu Tourism Development Corporation Limited has invited suggestions from the public for a Motif and Slogan.